# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 21 வியாழக்கிழமை 07.11.2024 கதிர் 410







## தேர்தலில் வாக்களிப்பதற்கு சம்பளத்துடன் விடுமுறை!

கொழும்பு, நவ. 07

எதிர்வரும் 14 ஆமதிகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச மற்றும் தனியார் துறைப் பணியாளர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

வாக்களிப்புத் தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பின் படி, வாக்களிப்பு நிலையத்துக்கும், வேலைத்தளத்துக்கும் இடையிலான தூரத்தின் அடிப்படையில் 40 கிலோ மீற்றர் தூரத்துக்கு உடபட்டவர்களுக்கு அரை நாள் விடுமுறையும், 40 முதல் 100 கிலோ மீற்றர் வரையான தூரத்துக்கு உட்பட்டவர்களுக்கு ஒரு நாள் விடுமுறையும், 100 க்கும் 150 கிலோ மீற்றருக்கும் இடைப்பட்ட தூரமுடையவர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறையும், 150 கிலோ மீற்றர் தூரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டு நாள்கள் விடுமுறையும் சம்பளத்துடன் கூடியதாக வழங்கப்படுவதுடன், வழங்கப்படும் விடுமுறை விசேட விடுமுறையாகக் கொள்ளப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மேலும், வாக்களிக்கச் செல்வதற்காக விடுமுறை தேவைப்படும் பணியாளர்கள் தமது வேலைத்தள மேலாளர்களிடம் எழுத்து மூல விடுமுறை விண்ணப்பததைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும்என தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஐ - 023)

# லொஹான் ரத்வத்தவின் விளக்க மறியல் நீடிப்பு!



**நுகேகொட, நவ. 07**

**முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.**

.வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட சொகுசு கார் ஒன்றைச் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயும், அவரது மனைவியும் நுகேகொட நீதவான் நீதிமன்றத்தில் இன்று காலை முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் லொஹான் ரத்வத்த கடந்த மாதம் 31ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சுகவீனமுற்ற முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, நவம்பர் 2ஆம் திகதி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

லொஹான் ரத்வத்தவிற்கு அங்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், நவம்பர் 3 ஆம் திகதி லொஹான் ரத்வத்த திடீர் நோய் நிலைமை காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர், பின்னர் பொது வார்டுக்கு மாற்றப்பட்டு சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் இருந்தார்.

இதேவேளை, கார் சம்பவம் தொடர்பில் கடந்த 04ஆம் 2➤

# யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைகளுக்கு சீனத் தூதுவர் அடுத்த வாரம் வருகிறார் !

கொழும்பு, நவ. 07

வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு அடுத்த வாரம் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்விருக்கும் இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்குச் செல்லும் சீனத்தூதுவர், இலங்கையிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கு சீன அரசாங்கத்தினால் வழங்கப்படும் சீனத் தூதுவர் புலமைப்பரிசில் நிதிய நன்கொடையைக் கையளிக்கவுள்ளார் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும், வசதி குறைந்த மாணவர்களுக்கு சீனத் தூதரகத்தின் ஏற்பாட்டில் 2016 ஆம் ஆண்டு முதல் சீனத் தூதுவர் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுவருகிறது. யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்கு 2021 ஆம் ஆண்டு முதல் சீன அரசாங்கத்தினால் இந்த நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. சீனத் தூதரகத்தின் வழிகாட்டுதல்களுக்கமைய அந்தந்தப் பல்கலைக்கழகங்களால் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்படும் சுமார் 50 மாணவர்களுக்கு மாதாந்தம் இந்நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ-05)

## முதுபெரும் எழுத்தாளர் மு. பொ. மறைந்தார்!




யாழ்ப்பாணம், நவ. 07

தமிழ் எழுத்துலகில் முதுபெரும் எழுத்தாளர் மு பொ என்றழைக்கப்படும் மு . பொன்னம்பலம் நேற்றிரவு கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சொந்த இடமாகக் கொண்ட அமரர் மு.பொ, ஈழத்தின் புகழ் பூத்த எழுத்தாளர்களில் ஒருவராவார்.

கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனக் கட்டுரைகள் என பல்துறைகளிலும் பங்களித்த இவர், 1938 இல் பிறந்த இவர் தனது 11ஆவது வயது முதல் கவிதை எழுதத் தொடங்கினார். இவரது முதற்கவிதைத் தொகுதி 1968 இல் வெளிவந்தது. (ஐ)

# க.பொ.த உயர்தரப் பரிட்சை அனுமதி அட்டைகள் தபாலில்!




கொழும்பு, நவ.07

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் டிசம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணை ஆகியன தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களின் அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணை ஆகியன அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கும், தனிபட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டை மற்றும் நேர அட்டவணை ஆகியன அவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அஞ்சல் மூலமாக அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான **www.doenets.lk** இலிருந்து எதிர்வரும் 18ஆம் திகதி முதல் அவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகளின் பெயர் விவரங்கள் மற்றும் விண்ணப்பித்த பாடங்கள் தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அனைத்து பரீட்சார்த்திகளும் **http://onlineexams.gov.lk/eic** என்ற இணையத்தளத்தில் நவம்பர் 18ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை திருத்தங்களைச் செய்யலாம் எனவும்,

எக்காரணம் கொண்டும் பரீட்சை நிலையங்களை மாற்றும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ஐ - 07)

# நாடு மீண்டும் பாரிய சவாலை எதிர்கொள்ளும் ருவான் விஜேவர்தன பகிரங்கம்

கொழும்பு, நவ.07

நாடாளுமன்றத்தை பல வந்தமாக கைப்பற்ற முயற்சித்த குழு வொன்று அதனைக் கைப்பற்றுவதற்கான போட்டியில் இறங்கியுள்ள நிலையில், எதிர்பாராத சவால்களை இலங்கை எதிர்கொள்ளும் நிலை உருவாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனநாயக முன்னணி வேட்பாளருமான ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். தெல்கொடவில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய விஜேவர்தன, நாடாளு மன்ற பாரம்பரியம் மற்றும் கலாசாரம் பற்றி அறியாதவர்கள் இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிடுவது நாட்டை நிச்சயமற்ற நிலைக்கு தள்ளும்.



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர் காலத்தில் கடின மான சூழ்நிலையின் போது இந்த நாட்டு மக்களுக்குத் தேவைப்படுவ தால் அவர் நீண்ட காலம் அரசிய லில் அமைதியாக இருக்க முடியாது.

இந் நிலையில், எதிர் கால சவால்களை எதிர் கொள்ள அனுபவம் வாய்ந்த குழு ஒன்று சபைக் குள் வர வேண்டும் என்றும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டுள் ளார். (5)

# எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய கட்டணங்களில் மாற்றம்

பல அத்தியாவசிய சேவைகளின் கட்டணங்கள் குறைக்கப்படும் என தேசிய மக்கள் கட்சியின் காலி மாவட்ட வேட்பாளர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார். இதன்படி எரிபொருள், மின்சாரம், நீர் போன்றவற்றுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். காலியில இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே காலி மாவட்ட வேட்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகளின் கட்டணங்கள் குறைப்பதற்கான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது எரிபொருள், மின்சாரம், தண்ணீர் போன்றவற்றுக்கு அறவிடப்படும் கட்டணம் மிக அதிகமாக இருப்பதுடன் இதனால் சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேல் வருமானம் ஈட்டும் நபர்களுக்கு வருமானம் ஈட்டும் போது விதிக்கப்படும் வரி இரண்டு இலட்சம் என்ற வரம்பிற்கு கொண்டு வரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5)

## லொஹான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திகதி கங்கொடவில நீதிமன்றத்தில் ஆஜரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவி ரஷி பிரபா ரத்வத்தவையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் பல தடவைகள் மிரிஹான பொலிஸில் ஆஜராகி வாக்குமூலமொன்றை வழங்குமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (ஜ-05)

# சீன உதவிக்கு அனுமதி!

கொழும்பு, நவ.07

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச சீருடைக்கான அனுசரணையை வழங்குவதற்கு சீன அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து அரசாங்கப் பாடசாலைகள் மற்றும், பிரிவெனா மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான சுமார் 12 மில்லியன் மீற்றர் சீருடைத் துணிக்கான அனுசரணையை வழங்க சீன அரசாங்கம் முன்வந்திருந்த நிலையில், சீனாவிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை அனுமதி கோரிப் பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவினால் முன வைக்கப்பட்ட அமைச் சரவைப் பத்திரமே அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியின் படி, சீன அரசாங்கத்தின் உதவியை ஏற்றுக்கொள்வதுடன், சீருடைத் துணியின் தரப்பரிசீலனைக்காக இலங்கை ஆடைகள் மற்றும் புடவைப் பயிற்சி நிலையத்தின் உதவியைப் பெறுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-03)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557



'எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை
'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை
'வெற்றி' எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்




நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழில் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு,
பொருளாதார
அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9




நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

தமிழர் தம் முழு முதற்கடவுளான முருகப்பெருமானை வழிபடுவதற்கு சிறந்த விரதங்களில் கந்தசஷ்டி விரதம் முக்கியமான ஒன்றாகும். ஐப்பசி அமாவாசை முடிந்து, பிரதமை தொடங்கி சஷ்டி வரையான ஆறு நாள்கள் தேவ சேனாதிபதி முருகனுக்கும் சூரனுக்கும் இடையே நிகழ்ந்த போரில் சூரனை சம்ஹாரம் செய்து அபாரமாக வெற்றியும் பெற்றார் முருகன். இந்த வெற்றியைப் போற்றும் விதமாகவே, வருடந்தோறும் ஆறு நாள்கள் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

முறையாகக் கடைப்பிடிக்கப்படும் சஷ்டி விரதத்தின் பலன்கள் ஏராளம். கந்தனுக்கு உகந்த சஷ்டி விரதம் இருந்தால் அந்த முருகனே கருப்பையில் பிள்ளையாய் வளர்வான் என்பதையே, “சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும்” என்று முன்னோர்கள் சொல்லி வைத்தனர். சஷ்டி விரதம் மேற்கொண்டால், துன்பங்கள் நீங்கும், வேலைவாய்ப்பு பெருகும், கடன் தொல்லைகள் நீங்கும் என்பது நம்பிக்கை.

மாதந்தோறும் வளர்பிறை, தேய்பிறை சஷ்டி விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு கவலைகள் தீரும் திருமண பாக்கியம் கைகூடும். பிள்ளை வரம் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். சூரபத்மனை வதம் செய்த நிகழ்வு முருகன் கோவில்களில் இன்று மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.





## இன்று கந்தசஷ்டி சூரசம்ஹாரம்

# அமரர் இடர் தீர சமரம் புரிந்த குமரன்

தீபாவளி முடிந்து வரும் அமாவாசையை அடுத்து, ஐப்பசி மாத வளர்பிறையில் முதல் ஆறு நாட்கள் கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆறாவது நாள் கந்த புராண யுத்த காண்டதின் படி சூரசம்ஹாரம் இடம் பெறுகின்றது. கந்தபுராணத்தின் படி சூரபத்மனை அழித்து அருள்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்கதான - ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தி லாண்டவர் சந்நிதானத்தில் கந்தசஷ்டி விழா மிகவும் பக்திபூர்வமாக வருடந்தோறும் கொண்டாடப்படுகிறது. இன்றைய நாளில் உலகெங்கணும் இருந்து பல லட்சக்கணக்கான முருக பத்தர்கள் திருச்செந்தூரில் கூடி சூர சம்ஹாரத்தைக் கண்டுய்யும் பேற்றைப் பெறுகின்றனர்.




ஈழத்தில் புகழ்பூத்த ஆலயங்கள் பலவற்றிலும் சூர சம்ஹாரம் இடம்பெறுகிறது. குறிப்பாக பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலும் வருடாந்தம் சூரன் போர் வெகு சிறப்பாக இடம்பெறுவது வழமையாகும். நல்லூர்ப் பதியில் அமர்ந்திருந்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ சண்முகப்பெருமான் இன்று மாலை எழுந்தருளி சூரனை வதம் செய்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் அத்தனை அம்சங்களும் கீர்த்திமிக்கனவாகினும், அங்குள் ஆறுமுகப்பெருமான் அருள் மிகுந்தவர். வருடத்தில் இரண்டு முறைகள் மாத்திரமே எழுந்தருளுவது வழமை. விசேடமான ஏதாவது சந்தர்ப்பங்களைத் தவிர தேர்த்திருவிழாவின் போதும், கந்தசஷ்டி சூரன்போருக்கும் மட்டுமே ஸ்ரீ சண்முகப்பெருமான் எழுந்தருளி அருள் பாலிப்பார். கருணைகூர் முகங்கள் ஆறு கொண்ட சண்முகப்பெருமானைக் காண்பதற்குக் கண்கள் இரண்டு போதாது.

(05ஆம் பக்கம் பார்க்க)

# அமரர் இடர் தீர ...



## சூரசம்ஹாரம்


சூரன் சிறந்த சிவபக்தன். அண்டம் விட்டு அண்டம் பாயும் வரம் பெற்றவன். ஆணவமலத்தால் பீடிக்கப்பட்டு அதர்ம வழியில் சென்றான். அதனால் பரம்பொருளின் தவப்பயனாய் வந்துதித்த முருகப் பெருமானுடன் நேருக்கு நேராய்ப் பொருதும் நிலை ஏற்பட்டது. தேவர்களின் துயர்துடைக்க தேவசேனாதிபதியாய் திருச்செந்தூரில் உருக்கொண்ட ஆறுமுகப்பெருமான் சூரனுடன் போர் புரிந்து வதம் செய்தார்.

போரின் போது தனது சகோதரர்களையும், தன் சொந்த பந்தங்களையும், துணை நின்ற படைச் சேனைகளையும் இழந்து செய்வதறியாது நின்ற நேரத்தில் கூட சூரனின் ஆணவம் அடங்கவில்லை. தானே போருக்கு செல்வதாக முடிவு செய்து முருகப் பெருமான் முன் தோன்றி சரமாரியாக அம்புக் கணைகளைத் தொடுத்தான். அவையாவும் முருகவேளின் கடைக்கண் பார்வையால் அழிந்தன. சூரன் தனது மாயஜாலங்களினால் பலவாறாகத் தோன்றி போர் செய்தான். அப்போது முருகன் சூரனை நோக்கி இப்போதும் நீ உயிர்வாழலாம் தேவர்களை சிறையில் இருந்து விடுவித்து விடு என்று அறிவுறுத்தினார்.

ஆனாலும் அவனது ஆணவம் அடங்கவில்லை. அதனால் போர் செய்யவே துடித்தான். வீரமகேந்திர புரத்தில் பற்பல மாயங்கள் செய்து போர் புரிந்தான். கடலாய், இருளாய் மாறி மாறிச் செய்யும் போர் எதுவும் சூரனுக்கு உதவவில்லை. உதவிசெய்ய இருந்த உற்றமும், சுற்றமும் அழிந்து உறவும் அற்றுப் போனதால் சூரனும் மயங்கித் தத்தளித்தான்: செய்வதறியாது திகைத்தான். தன்னுடன் போர் செய்ய வந்தது இறைவனே என அறிந்தும், அடிபணிய அவனது ஆணவம் விடவில்லை.

முருகன் சூரனின் ஆணவத்தை அடக்கும் பொருட்டு தன் விஸ்வரூபத்தைக் காட்டினார். எல்லாம் வல்ல பரம்பொருள் தாமே என பரமேசுர வடிவம் காட்டினார். சிவனும், அவன் மகனும் மணியும் ஒலியும் போல ஒருவரே என்றுணர்த்தினார். எந்த நிலையிலும் தன் தன்மை மாறாது போர் செயலானான் சூரன்.

சூரன் போர் செய்த ஒவ்வொரு தினமும் தனது ஆயுதங்களை ஒவ்வொன்றாக இழந்தான். அவன் தனக்கு சிவனால் வழங்கப் பெற்ற "இந்திரஞாலம்" என்னும் தேரை அழைத்து முருகனின் படைச் சேனையையும் துக்கிச் சென்று பிரபஞ்ச உச்சியில் வைக்கும்படி கட்டளை இட்டான். இந்திரஞாலமும்



அவன் கட்டளையை நிறைவேற்ற முருகனின் படையைத் தூக்கிப் பிரபஞ்ச உச்சிக்கு கொண்டு சென்றது. முருகனின் வேலானது சீறிப்பாய்ந்து தேரைத் தடுத்து நிறுத்தி முருகனிடம் கொண்டு வந்து சேர்த்தது. முருகன் அத்தேரை தம் வசப்படுத்தி தன் உடைமையாக்கிக் கொண்டார். இது கண்ட சூரபத்மன் செய்வதறியாது திகைத்தான்.


தொடர்ந்து, சிவன் தனக்களித்த சூலப்படையை முருகனை அழிக்கும்படி ஏவினான். சூலப்படை முருகனை நோக்கி வந்த போது முருகனின் வேல் அதனை மழுங்கச் செய்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த சூரன், கடைசியாக தனது அம்புப் படையை முருகனை அழிக்க அனுப்பினான். முருகனின் வேல், அம்புகளைப் பொடிப் பொடியாக்கி செயலிழக்கச் செய்தது.

முருகனால் தான் இறப்பது நிச்சயம் என உறுதியாக தெரிந்திருந்தும் தேவர்களை விடுதலை செய்வது மானக் குறைவு என எண்ணிய சூரன் ஆணவ மிகுதியால் தொடர்ந்தும் போராடினான். இது கண்ட முருகப் பெருமான் நிராயுதபாணியாக இருக்கும் எதிரியுடன் ஆயுதம் தாங்கி போர் புரிவது யுத்த தர்மத்திற்கு விரோதமானது என எண்ணினார். இந்திரனை மயிலாக உருமாறும்படி கூறி அதன் மீது பறந்து சூரனைத் தாக்கலானார். சூரனும் தனது மாயாஜால வித்தைகளினால் மறைந்து தாக்கி மறைந்தான்.

தனது படையையும், படைக் கலங்களையும் இழந்த சூரன் அண்டங்கள் எல்லாம் மறைந்து ஒழிந்து பதுங்கினான். கடைசியாக முருகப் பெருமான் எய்திய வேல் அவன் சென்ற இடமெல்லாம் துரத்திச் சென்று நடுக்கடலடியில் மாமரமாய் மாறுவேடத்தில் நின்ற சூரனை நீரினுள் சென்று மாமரத்தை இருகூறாக்கி சூரனை சம்ஹாரம் செய்தது.

ஆணவம் அழியப் பெற்ற சூரன் தன தவறை உணர்ந்து தன்னை மன்னித்து, ஏற்றுக்கொள்ளும்படி முருகனிடம் மன்றாடினான். அவன் மேல் இரக்கம் கொண்ட முருகன் பிளவுபட்ட மாமர பாதிகள் இரண்டையும் தன் அருளால் சேவலாகவும், மயிலாகவும் மாற்றினார். மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியிலும் தன்னுடன் பிணைத்துக் கொண்டார். வெற்றி வீரத் திருமகனாய், முருகப் பெருமான் திருச்செந்தூர் திரும்பினார்.

சூரசம்காரங்கள் முடிந்த பின்னர், இந்திரன் தேவயானையை முருகப் பெருமானிடமே ஒப்படைக்க முடிவுசெய்தார். முருகனும் சரவணப் பொய்கையில் முன்னர் தாம் அருளிய வாக்கின் படியே, தேவானை அம்மையைப் திருப்பரங்குன்றில் திருமணம் செய்து கொண்டார். பின்னர், வள்ளியை திருத்தணியில் திருமணம் புரிந்தார். இதனைக் குறிக்குமுகமாக ஏழாவது நாளில் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுகிறது.



# கொழும்பின் பல பகுதிகளில் வெளிநாட்டவர் உட்பட நால்வர் கைது

கொழும்பு, நவ. 07

கொழும்பின் பல்வேறு பகுதிகளில் வெளிநாட்டவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் மாத்திரைகளை விழுங்கிய சீராலியோன் நாட்டவர் ஒருவர் பொரளை வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது அவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது சந்தேகநபருடன் 500 அமெரிக்க டொலர்கள் மற்றும் பல வெளிநாட்டு நாணயத்தாள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் 2400 மில்லிகிராம் கொக்கேய்னுடன் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, காலி பின்னதுவ அதிவேக வீதி நுழைவாயிலில் வைத்து 279 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் (19 மாத்திரைகள்) ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரினால் வெளியிடப்பட்ட தகவலுக்கமைய, மேலும் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் உருண்டைகளாக விழுங்கிய நிலையில் அவரது வயிற்றில் 672 கிராம் எடையுடைய 40 கொக்கேய்ன் மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் 52 வயதுடையவர் எனவும் மற்றைய நபர் 28 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)











# இலங்கையில் ஊழல்மோசடிகளை தடுக்க உதவும் பிரித்தானியா

கொழும்பு, நவ. 07

இலங்கையில் ஊழல் மற்றும் மோசடிகளை தடுப்பதற்கு இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பெட்ரிக் விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவுடன் நேற்று நடத்திய சந்திப்பின் போது, பிரித்தானிய உயர்ஸ்தானிகர், இந்த விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.


இலங்கையின் ஆட்சியை மேலும் மேம்படுத்தும் வகையில், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரித்தானிய நாடாளுமன்ற முறைமை குறித்து தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் இதன்போது முன்மொழிந்துள்ளார்.

பிரித்தானிய உள்ளூர் அரசாங்க அமைப்பு, மோசடி மற்றும் ஊழலைக் குறைக்கும் திறனைக் கொண்டுள்ளமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச வருவாயை அதிகரிக்கும் அதே வேளையில் மோசடி மற்றும் ஊழலை எதிர்ப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும், இலங்கைக்கான பிரிததானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பெட்ரிக் தெரிவித்துள்ளார். (ஐ)



# தோல்விக்கு பின்னர் கமலா ஹறிஸ் ஆற்றிய முதல் உரை



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ள நிலையில், தனது ஆதரவாளர்களை விரக்தி அடைய வேண்டாம் என மற்றுமொரு வேட்பாளரான கமலா ஹறிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் தோல்விக்கு பின்னர் தனது ஆதரவாளர்களை சந்தித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாம் ஒரு இருண்ட காலத்துக்குள் நுழையப்போவதாக பலர் உணரும் நிலையில், அமெரிக்கர்களின் நலனுக்காக அது அவ்வாறு இருக்காது என தான் நம்புவதாக கமலா ஹறிஸ் கூறியுள்ளார்.

முக்கிய 7 மாநிலங்களில் 5இல் வெற்றி பெற்றுள்ளதோடு இன்னும் அறிவிக்கப்படாத நெவாடா மற்றும் அரிசோனா ஆகிய மாநிலங்களிலும் ட்ரம்ப் முன்னிலை வகிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், ட்ரம்ப் சிறப்பான ஒரு வெற்றியை அடைந்திருப்பதாகவும் கமலா ஹறிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், குடியரசுக் கட்சியின் பிரதிநிதிகள் அமெரிக்க செனட்டின் கட்டுப்பாட்டை மீண்டும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







# இலத்திரனியல் கடவுச்சீட்டு தொடர்பில் பிரதிவாதியாக பெயரிடப்பட்ட ரணில்



கொழும்பு, நவ. 07

இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கு கடந்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்போராணை மனுவின் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிடப்பட்டுள்ளார்.

எபிக் லங்கா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தாக்கல் செய்த மனுவின் மீது நேற்று நடைபெற்ற விசாரணையின்போதே, ரணில் விக்ரமசிங்க, பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

விசாரணையின் போது, பிரதிவாதிகளாக பெயரிடப்பட்ட இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், 5 மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கு எதிராக நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவின் மூலம் தமது வாடிக்கையாளர்களுக்கு கடுமையான பாரபட்சம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

எனவே, தடையை நீக்க உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கிடையில், மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, கேள்விக்குரிய கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கை, முறைசாரா கொள்முதல் முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

அத்துடன், பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்குவதற்கு எதிர்ப்பை வெளியிட்டார் சமர்ப்பிக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு, கடவுச்சீட்டுக்களை வழங்குவதை தடுக்கும் தடையை நீக்கக் கோருவது தொடர்பிலான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டது.

அத்துடன், தடையை நீக்க வேண்டுமா இல்லையா என்பது குறித்த உண்மைகளை பரிசீலிப்பதற்காக டிசம்பர் 09ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# நீதிமன்றத்திலேயே வைத்து பெண்ணிடம் இலஞ்சம் பெற்ற நபர்

கொழும்பு, நவ. 07

மன்னார் நீதிமன்றத்தில் வைத்து இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் வவுனியா சிறைச்சாலை அலுவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த அலுவலரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கைது செய்யப்பட்ட வவுனியா சிறைச்சாலை அலுவலர், மன்னார் நீதவான் நீதிமன்றிற்கு நேற்றுமுன்தினம கடமைக்காக வந்துள்ளார். இதனையடுத்து, மன்னார் நீதிமன்ற தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரை பார்வையிடுவதற்காக சென்ற பெண் ஒருவரிடம் 1000 ரூபாய் பணத்தை பலவந்தமாகப் பெற்றுக் கொண்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தநிலையில், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் குறித்த சிறைச்சாலை அலுவலர் பாதிக்கப்பட்ட பெண்ணினால் அடையாளம் காண்பிக்கப்பட்ட நிலையில் அவர் நீதவான் நீதிமன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது, விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த சிறைச்சாலை அலுவலரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2024 இல் வெளியிடப்பெற்றது.